Alcohol and Drug
Information Centre
ADIC

No.40/18, Park Road, Colombo 05, Sri Lanka.
Tel: +94 11 2584416,+94 11 2592515, Fax: +94 112508484
Email: info@adicsrilanka.org
Web site: http//www.adicsrilanka.org

ஊடகச் செய்தி

24.03.2021

## இலங்கையில் கறுவா சிகரட்டுக்களை ஊக்குவிப்பதானது சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் பொது சுகாதாரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

சிகரட் நிறுவனமானது, தமது நிறுவனத்தின் இலாபத்தை நிலைநாட்டுவதற்கும், புகைத்தலை ஊக்குவிப்பதற்கும் பல்வேறு தந்திரோபாயங்களை மேற்கொண்டு வருகின்றது. நிக்கோட்டின் இல்லாத சிகரட்டுக்களை அறிமுகப்படுத்தல் என்பது அந்நிறுவனத்தின் வியாபார நுணுக்கங்களில் ஒன்றாகும். அதே போன்றே இலங்கையில் கறுவா சிகரட்டுக்களை அறிமுகப்படுத்தும் நுட்பத்தையும் மேற்கொண்டு வருகின்றது. இலங்கையை பொறுத்தவரையில் கடந்த வருடங்களின் சிகரட் பாவனையானது சடுதியாக குறைவடைந்து வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது. இதனை கருத்திற்கொண்டு குறிப்பிட்ட நிறுவனம் வேறு வழிமுறைகளில் இலாபம் ஈட்டுவதனை நோக்கமாகக் கொண்டும் கருவா சிகரட் எனும் போர்வையில் பிற சிகரட் வகைகளை அறிமுகப்படுத்தி இத்தகைய பிரச்சாரங்களை செய்து வருகின்றது. இவை முற்றுமுழுதாக சிகரட் நிறுவனத்தின் ஆசீர்வாதத்திலேயே இடம்பெறுகின்றது என்பது எமது நம்பிக்கையாகும்

ஆயுர்வேதம் எனும் பெயரில் அடங்கியுள்ள அனைத்து புகைப்பழக்கங்களிலும் நிக்கோடின் என்கின்ற இரசாயணம் இல்லை என்றாலும், இவற்றுள் ஏனைய தீங்கு விளைவிக்கும் பொருட்கள் அடங்கியுள்ளன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளன. மேலும் இவை பாரியளவிலான சுகாதார பிரச்சினைகளையும் ஏற்படுத்தும். கறுவா சிகரட் வகைகளில் தார், கார்பன் மொனோக்சைட்டுக்கள், நறுமண இரசாயணங்கள் மற்றும் புற்று நோயை ஏற்படுத்தும் இரசாயணங்கள் அடங்கியுள்ளமையை குறிப்பிட்ட சிகரட் வகையை உற்பத்தி செய்யப்படும் நாடுகள் அறிவியல் பூர்வமாக நிரூபித்துள்ளன. அது தவிர எந்த சந்தர்ப்பங்களிலும் ஒரு சராசரி நபர் தொடர்ந்து புகைப்பிடிக்க வேண்டும் என ஆயுர்வேத முறைகளில் அனுமதிக்கப்படவில்லை அத்தோடு புகைப்பிடித்தல் என்பது அத்துறை சார்ந்த வைத்தியர்களால் பரிந்துரைக்கப்பட்ட விடயமும் அல்ல.

கறுவா சிகரட் ஒரு தொழிற்றுறையாக ஊக்குவிக்கப்படுவதற்கு முன்னர், அவற்றின் சுகாதாரம், ஆரோக்கியம் தொடர்பான விஞ்ஞான ரீதியான மருத்துவ ஆராய்ச்சி முன்வைக்கப்படுதல் வேண்டும். கருவா சிகரட் விளம்பரதாரர்கள் அவை சுகாதாரத்திற்கு சிறந்த ஒரு வகை என எந்த ஒரு ஆராய்ச்சிகளையும், ஆதாரபூர்வமான முடிவுகளையும் இது வரையில் முன்வைக்கவில்லை. இயற்கையாகவே மனிதனின் நுரையீரல் சுற்றுச்சூழலின் சாதாரண காற்றை உறிஞ்சும் வகையிலேயே அமைந்துள்ளது. ஆகவே அவற்றை மீறிய எந்தவொரு புகையை சுவாசிக்கும் போதும், நுரையீரலினுள் உறிஞ்சும் போதும் அவை உடலிற்கு தீங்கு விளைவிக்கும் என துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்

உலகெங்கிலும் இயங்கும் சிகரட் நிறுவனம் கஞ்சா பாவனையை பிரபல்யப்படுத்துவதற்கும், சமூகமயப்படுத்துவதற்கும் தொழிற்பட்டு வருகின்ற அதே வேளை, ஆயுர்வேதம் எனும் பெயரை போலியாக பயன்படுத்திக்கொண்டும், பிரபல்யப்படுத்திக்கொண்டும் சில கஞ்சா பயிர்ச்செய்கைகளின் பெரும்பகுதியை வணிக தொழிற்பாட்டின் நோக்கத்துடன் சிகரட் நிறுவனம் விலைகொடுத்து

வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கறுவா சிகரட்டிற்கு பின்னர் அதே வழியில் கஞ்சா சிகரட் அறிமுகமாவதற்கு காணப்படும் வாய்ப்புக்கள் அதிகம். ஆகவே எதிர்கால சந்ததியினர் புகைத்தலிற்கு நாட்டம் காட்டாத இச்சந்தர்ப்பத்தில் ஆயுர்வேதம் எனும் போர்வையில் புகைத்தலை பிரபல்யப்படுத்தும் இவ்வாறான சதித்திட்டங்களில் இருந்து எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உட்பட அனைத்துக் கட்சிகளும், நலன்விரும்பிகளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் வலியுறுத்துகிறது.

மதுசாரம் மற்றும் பொதைப்பொருள் தகவல் நிலையம்
40/18, பார்க் வீதி, கொழும்பு 05
இணையம் : www.adicsrilanka.org
தொ.பே : 011 2584416
தொலைநகல் : 011 2508484